செய்தி வெளியீடு எண்: 226 நாள்: 08.03.2019

<u>செய்தி வெளியீடு</u>

## ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் சிறந்த வல்லுநர்களுக்கு தமிழ்நாடு அரசின் கலைச்செம்மல் விருதுகள் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு, கலை பண்பாட்டுத் துறையின் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மூலமாக மரபுவழி, நவீனபாணி கலைப்பிரிவுகளைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவியம், சிற்பக்கலை வல்லுநர்களுக்கு அவரவர்கள் துறைகளில் புரிந்துவரும் அரிய சாதனைகளை பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் **கலைச்செம்மல்** விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2013–14 முதல் 2017–18 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு கீழ்க்கண்ட பத்து (10) கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருதுகளை அறிவிப்பதில் **மாண்புமிகு அம்மா** அவர்களின் நல்லாசியுடன் திறம்பட ஆட்சிபுரியும் மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் தலைமையிலான தமிழக அரசு பெருமிதம் கொள்கிறது. விருது பெறும் ஒவ்வொரு கலைஞருக்கும் ரூ.50,000/– விருதுத்தொகையும், செப்புப் பட்டயமும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள் என மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | ஆண்டு | பெயர் | கலைப்பிரிவு |
|---|---|---|---|
| 1. | 2013–2014 | திரு.பி.எஸ்.நந்தன் | நவீனபாணி |
| 2. | 2013–2014 | திரு.எஸ்.கணபதி ஸ்தபதி | மரபுவழி |
| 3. | 2014–2015 | திரு.பி.கோபிநாத் | நவீனபாணி |
| 4. | 2014–2015 | திரு.இராமஜெயம் | மரபுவழி |
| 5. | 2015–2016 | திரு.அனந்தநாராயணன் நாகராஜன் | நவீனபாணி |
| 6. | 2015–2016 | திருமதி எம்.தமிழரசி | மரபுவழி |
| 7. | 2016–2017 | திரு.சி.டக்ளஸ் | நவீனபாணி |
| 8. | 2016–2017 | திரு.எஸ்.கீர்த்திவர்மன் | மரபுவழி |
| 9. | 2017–2018 | திரு.ஜெயகுமார் | நவீனபாணி |
| 10. | 2017–2018 | திரு.ஆ.கோபாலன் ஸ்தபதி | மரபுவழி |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**